# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2021 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

### வினா இல. 01

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட தெரிவுகளிலிருந்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுகள் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களில், தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விடையளிக்குமாறு கேட்கப்பட்டது.

இந்த உப வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளில் இனங்காணப்பட்ட பொதுவான வழுக்கள் / பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வினா இல. 1.1**

நிதிக் கணக்கீட்டின் நோக்கம் பற்றிக் கேட்கப்பட்டது. வினாவைத் தவறாக விளங்கிக்கொண்டதன் காரணமாக, சில பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. 3 இனைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. 1 மற்றும் இல. 2 இனைத் தெரிவு செய்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.2**

அட்டுறு எண்ணக்கரு பற்றி வினவப்பட்டது. கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய போதிய அறிவின்மையால் சில பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. 2 ஐத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. 1 மற்றும் இல. 3 இனைத் தெரிவு செய்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.3**

இவ்வினா வங்கிக் கணக்கிணக்கம் பற்றிய அறிவைப் பரீட்சிக்க முனைந்திருந்தது. சில பரீட்சார்த்திகள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படைத் தகவல்கள் பற்றிய சரியான விளக்கத்தைக் கொண்டிருக்காததால் சரியான விடையான இல. 3 இனைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. 4 இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.4**

இங்கு, இலாபச் சமன்பாட்டைப் பயன்படுத்தி ஆண்டின் இறுதியில் உரிமையாண்மையை (மூலதனம்) கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகளிடம் இலாப சமன்பாடு பற்றிய போதிய விளக்கமின்மையால் சரியான விடையான இல. 3 இனைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக இல. 4 இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.5**

சமர்ப்பிக்கப்பட்ட நான்கு ஊடுசெயல்களிலிருந்து, சில பரீட்சார்த்திகள் சொத்துக்களின் அதிகரிப்புக்கான காரணத்தை விளங்கிக் கொள்ளாததால் சரியான விடை இல. 4 இற்குப் பதிலாக விடை இல. 1 மற்றும் 2 இனைத் தெரிவு செய்திருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.6**

கணக்கீட்டுச் செயன்முறையின் வெளியீடு பற்றி பரீட்சார்த்திகள் சரியான விளக்கத்தைக் கெண்டிருக்கவில்லை. இதனால் சரியான விடையான இல. 1 இற்குப் பதிலாக இல. 2 இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.7**

கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களைத் திருப்பியனுப்புவதற்கு கொள்வனவாளர் ஒருவரால் பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. மூல ஆவணங்கள் பற்றிய போதிய விளக்கமின்மையால், பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. 4 இற்குப் பதிலாக இல. 1 மற்றும் 2 இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.8**

இங்கு, விசேட (தனிப்பயனாக்கப்பட்ட) கணக்கீட்டு மென்பொருள் ஒன்றிற்கான உதாரணத்தை இனங் காணுமாறு கேட்கப்பட்டது. கணக்கீட்டு மென்பொருள்கள் பற்றிய போதிய அறிவின்மையால், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. 2 இற்குப் பதிலாக இல. 1 ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.9**

நிதி நிலைக் கூற்றில் கொள்வனவு விலையில் நிலையான சொத்துகளைக் காட்டுவதற்கான காரணத்துடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. தரப்பட்ட தகவல்களுக்கு இணங்க, பெரும்பாலான பரீட்சார்த்திகளால் சரியான கணக்கீட்டு எண்ணக்கருவை அடையாளங் காண முடியவில்லை. அவர்கள் சரியான விடையான இல. 3 இற்குப் பதிலாக இல. 1 ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.10**

சில பரீட்சார்த்திகள் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையைப் பயன்படுத்தி நிலையான சொத்துகளின் தேய்மானத்தைக் கணிப்பிடுவதில் போதிய அறிவைக் கொண்டிருக்காததால் சரியான விடையான இல. 2 இற்குப் பதிலாக இல. 4 ஐத் தெரிவு செய்திருந்தனர்.

வினா இல. **1.11** தொடக்கம் **1.15** வரை தரப்பட்ட ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனப் பரீட்சார்த்திகள் குறிப்பிட வேண்டும். இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

**வினா இல. 1.11**

கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய போதிய அறிவின்மையால், சில பரீட்சார்த்திகள் சரியான விடையான ‘‘**சரியானது**’’ என்பதற்குப் பதிலாக ‘‘**தவறானது**’’ எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 1.12**

அதிகளவான பரீட்சார்த்திகள் ''**சரியானது**'' என விடையளித்திருந்தனர். கால மாறுபாடு காரணமாக, ஒவ்வொரு மாத இறுதியிலும் வணிக நிறுவனமொன்றின் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் தோன்றும் மீதியானது ஒவ்வொரு மாத இறுதியிலும் அந்த நிறுவனத்தின் வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதிக்குச் சமனாக இருக்காது.

**வினா இல. 1.13**

சில பரீட்சார்த்திகள் முதன்மைப் பதிவேடு பற்றிய போதிய அறிவைக் கொண்டிருக்காததால் சரியான விடையான **''சரியானது''** என்பதற்குப் பதிலாக ''**தவறானது**'' என விடையளித்திருந்தனர்.

**வினா இல. 1.14**

இங்கு, நிதி நிலைக் கூற்றுடன் தொடர்புபட்ட பிரதான மூலகங்கள் பற்றி வினவப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியான விடை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.15**

இங்கு, ''பரிப்பு'' என்பதன் சரியான வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இந்தக் கூற்று ''**சரியானது**'' என சரியான விடை அளித்திருந்தனர்.

இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது.

**வினா இல. 1.16**

வணிகத்தின் இரண்டு (02) நாட்டதாரர்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியான விடை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.17**

கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமைக்கு மாறுவதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியான விடை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.18**

நடைமுறைப் பரிப்புகளுக்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியான விடை அளித்திருந்தனர்.

**வினா இல. 1.19**

வழங்கப்பட்ட தகவல்களுக்கு இணங்க 2021 மார்ச் 31 இலான வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியைக் கணிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். சரியான விடையான ரூபா 530,000/- இற்குப் பதிலாக, சில பரீட்சார்த்திகள் கூட்டல் மற்றும் கழித்தல் அடையாளங்களை மாறி மாறிக் குறித்திருந்த காரணத்தால் வெவ்வேறு விடைகளைப் பெற்றிருந்தனர்.

**வினா இல. 1.20**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகள் கணக்கு தொடர்பான வரவு மற்றும் செலவுப் பதிவுகளை இடமாற்றிப் பதிவு செய்ததன் காரணமாக வேறுபட்ட விடைகளைப் பெற்றிருந்தனர்.

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

இந்த வினா **(A)** மற்றும் **(B)** என 2 பகுதிகளைக் கொண்டது. **பகுதி (A)** இல் கணக்கீட்டுச் சமன்பாடு பற்றிய அறிவும் **பகுதி (B)** இல் கொள்வனவு நாளேட்டின் (கொள்வனவு நாட்குறிப்பேடு) தயாரிப்பு பற்றிய அறிவும் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியான விடைகளை அளித்திருந்ததால் அவர்களால் முழுமையான புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

**(A) கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான தாக்கம் :**

(1) ஒவ்வொரு கணக்கீட்டு ஊடுசெயல் மூலமாகவும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் தாக்கத்தை சில பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

(2) சொத்துகள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அதிகரிப்பு அல்லது குறைவு காரணமாக ஏற்படும் தாக்கத்தைப் பெரும்பாலானவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

(3) நேர் மற்றும் மறைப் பெறுமானங்களை குறிப்பிடத் தவறியிருந்தனர்.

(4) ஒரு பெறுமானத்தை மாத்திரம் பதிவு செய்திருந்தனர்.

(5) பெறுமானத்தைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, சில பரீட்சார்த்திகள் ‘அதிகரிப்பு’ அல்லது ‘குறைவு’ என மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர்.

(6) குறிப்பிட்ட ஊடுசெயல் காரணமாக தாக்கத்திற்குள்ளான உருப்படிகளை மாத்திரம் கவனத்தில் கொள்ளும் வழிமுறையில் வெவ்வேறாக சமன்பாட்டைக் கவனத்தில் கொண்டு ஊடுசெயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உதாரணம் – 01/03/2021 இல் இடம்பெற்ற ஊடுசெயல்

காசு = உரிமையாண்மை

1,000,000 = 1,000,000

**(B) கொள்வனவு நாளேட்டின் (கொள்வனவு நாட்குறிப்பேடு) தயாரிப்பு :**

பரீட்சார்த்திகளின் விடைகளிலிருந்து கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) சரியான வடிவத்தில் விடையளிக்கத் தவறியமை.

(2) வியாபாரக் கழிவைக் கழிக்காது முழுப் பெறுமதியையும் பதிவு செய்தமை.

(3) அலகு விலையை கணியத்தினால் பெருக்கும்போது தவறான பெறுமதிகள் பதிவு செய்யப்பட்டிருந்தமை.

(4) வியாபாரக் கழிவுகளைத் துல்லியமாகக் கணிப்பதற்குத் தவறியமை.

### வினா இல. 03

இந்த வினாவில் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவும் புரிதலும் பரீட்சிக்கப்பட்டன.

பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு திருப்திகரமாக விடையளித்திருந்தனராயினும் கீழ்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன :

(1) சரியான வடிவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

(2) புத்துருவாகும் வேலைகள் முதன்மைக் கிரயத்தில் சீராக்கம் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனை இறுதிக் கிரயத்தில் சீராக்கம் செய்திருந்தனர்.

(3) ஊக்கத்தொகை நேர் செலவினங்களின் கீழ் சீராக்கம் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனை மேந்தலைக் கிரயத்தின் கீழ் சீராக்கம் செய்திருந்தனர்.

(4) மேந்தலைச் செலவினங்களை தொழிற்சாலைக்கும் அலுவலகத்திற்கும் தரப்பட்ட சதவீதங்களில் பகிர எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவை துல்லியமாக கணிப்பீடு செய்யப்படவில்லை.

(5) நுகரப்பட்ட மூலப் பொருள்களின் கிரயம், முதன்மைக் கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயம் என்பன விடைகளில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(6) நேர் மற்றும் நேரில் செலவினங்கள் துல்லியமாக இனங்காணப்படவில்லை.

## வினா இல. 04

பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்ததன் பின்னர் பரீட்சை மீதியை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) பரீட்சை மீதியைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்ட போதிலும், சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்குகளை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

(2) சிலர் வரவுக் கணக்குகளை செலவுக் கணக்குகளுடன் குழப்பி எழுதியிருந்தனர்.

(3) கடன் விற்பனைகள் மற்றும் கடன் கொள்வனவுகள் என்பன கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஊடாக துல்லியமாக கணக்கிடப்படவில்லை.

(4) அட்டுறு மின்சாரம் மற்றும் முன்கூட்டிச் செலுத்தப்பட்ட நீர்க் கட்டணங்கள் என்பன சம்பந்தப்பட்ட செலவினக் கணக்குகளில் சரியாகச் சீராக்கம் செய்யப்படவில்லை.

(5) காசு மீதான விற்பனை, கடன் மீதான விற்பனை மற்றும் காசு மீதான கொள்வனவு, கடன் மீதான கொள்வனவு என்பன பரீட்சை மீதியில் வெவ்வேறாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(6) மோட்டார் வாகனத்தின் வருடாந்தத் தேய்மானம் துல்லியமாகக் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது பரீட்சை மீதியில் பதிவு செய்யப்படவில்லை.

## வினா இல. 05

இந்த வினா **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** இல், வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டதுடன் **பகுதி (b)** இல், தொங்கல் கணக்கைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர்.

கீழ்வரும் பலவீனங்களும் வழுக்களும்கூட அவதானிக்கப்பட்டன :

**பகுதி (a) – பொது நாட்குறிப்பேட்டின் தயாரிப்பு :**

(1) சிலர் நாட்குறிப்பேட்டிற்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்தனர்.

(2) தொங்கல் கணக்கின் ஊடாக திருத்தப்பட வேண்டிய பதிவுகள் இனங்காணப்படவில்லை.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் பின்னர் இனங்காணப்பட்டிருந்த இல. 1 வழு தொடர்பான அலுவலக உபகரணத்தின் தேய்மானம் பற்றிய நாட்குறிப்பேட்டுப் பதிவினை சமர்ப்பித்திருக்கவில்லை.

(4) குறிப்பு இல. 4 இன் பிரகாரம், வழுவானது சரியாக விளங்கிக் கொள்ளப்படவில்லை என்பதுடன் நாட்குறிப்பேட்டுப் பதிவும் பதிவு செய்யப்படவில்லை.

(5) இரண்டு பெறுமதிகளுக்குமிடையிலான வித்தியாசம் ரூபா 9,000/- இனைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, நாட்குறிப்பேட்டுப் பதிவுகளில் ரூபா 98,000/- மற்றும் ரூபா 89,000/- என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.

(6) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுடன் தொடர்புடைய வரவு மற்றும் செலவுப் பதிவுகள் மாறி மாறிப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(7) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்கும்போது, பொது நாட்குறிப்பேட்டிலுள்ள ஊடுசெயல்கள் வரவா அல்லது செலவா எனக் குறிக்கப்படவில்லை.

**பகுதி (b) – பொது நாட்குறிப்பேட்டின் தயாரிப்பு :**

(1) தொங்கல் கணக்கிலுள்ள ஆரம்ப செலவு மீதி (credit balance) கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) தொங்கல் கணக்கிலுள்ள ஆரம்ப செலவு மீதி பதிவு செய்யப்படவில்லை.

(3) தொங்கல் கணக்கிற்கு வரவுப்பதிவு செய்யப்பட வேண்டிய பதிவுகள் செலவுப் பதிவு செய்யப் பட்டிருந்தன.

(4) தொங்கல் கணக்கில் தாக்கத்தை ஏற்படுத்தாத சில ஊடுசெயல்கள்கூட தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

## <u>பகுதி C</u>

### வினா இல. 06

இந்த வினா **பகுதி (a)** மற்றும் **(b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** இல், முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிக்குமாறும் **பகுதி (b)** இல் நிதி நிலைக் கூற்றைத் தயாரிக்குமாறும் கேட்கப்பட்டது. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான பலவீனங்கள் கீழ்வருமாறு :

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு :**

(1) 2021 ஏப்ரல் மாதத்தில் கிடைக்கப்பெற்ற 2021 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான வாடகை வருமானம் ரூபா 200,000/- (2*100,000) கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதுடன் ரூபா 1,000,000/- மாத்திரம் பரீட்சை மீதியில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) ஆண்டிற்கான சரியான தேய்மானத் தொகை கணிக்கப்படவில்லை என்பதுடன் அது வருமானக் கூற்றுக்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(3) மின்சாரம் தொடர்பான அட்டுறு செலவினங்களும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் தொடர்பான செலவினங்களும் ஆண்டிற்கான செலவினங்களைக் கணிப்பிடும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(4) போதிய விளக்கமின்மையால், முற்றடக்க வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய உருப்படிகள் நிதி நிலைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

(5) ஆண்டின் காலப்பகுதியில் அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்படும் தொகையான ரூபா 100,000/- பற்றி பதிவு செய்யப்படவில்லை.

(6) மொத்த இலாபத்தைக் கணிக்கும் பொருட்டு, சில பரீட்சார்த்திகள் ஆண்டின் ஆரம்ப இருப்பினைக் கழித்திருந்ததுடன் ஆண்டின் இறுதி இருப்பைக் கூட்டியிருந்தனர்.

(7) தேய்மானமானது காணிக்குரிய பெறுமதியைக் கழிக்காது மொத்த காணி மற்றும் கட்டடத்தின் பெறுமதிக்குமாக கணிப்பிடப்பட்டிருந்தது.

(8) சிலர் முற்றடக்க வருமானக் கூற்றில், பரீட்சை மீதியில் ஆயிரங்களில் காட்டப்பட்ட எண் பெறுமானங்களைக் கவனத்தில் கொண்டிருந்ததுடன் சீராக்கத்திற்கு ஏற்புடையதான தொகைகளை அதன் முழுப் பெறுமதியில் காட்டியிருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு :**

(1) நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய அடிப்படை அறிவின்மையால் கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப இருப்பு, வாடகை வருமானம் மற்றும் ஏனைய செலவினங்கள் என்பன நிதி நிலைக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(2) அட்டுறு மின்சாரம், சம்பளங்களும் கூலிகளும் போன்றவை நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப் படவில்லை.

(3) வருமதியான வாடகை வருமானம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை என்பதுடன் அவை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்படவில்லை.

(4) ஆண்டிற்கான அறவிடமுடியாக் கடன் தொகை வியாபார வருமதிகளிலிருந்து சரியாகப் பதிவழிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(5) அடுத்த ஒன்பது மாதங்களுக்காக முன்கூட்டியே செலுத்தப்பட்ட காப்புறுதிச் செலவினம் ரூபா 1,170,000/- (130,000 * 9) ஆனது துல்லியமாகக் கணிப்பிடப்படவில்லை என்பதுடன் நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்படவுமில்லை.

(6) சிலர் நிதி நிலைக் கூற்றிலுள்ள உருப்படிகளைச் சரியாக வகைப்படுத்தியிருக்கவில்லை.

உதாரணம் : நடைமுறையல்லாச் சொத்துகள், நடைமுறைச் சொத்துகள், உரிமையாண்மையும் பரிப்புக்களும், நடைமுறைப் பரிப்புக்கள்

(7) சிலர் வியாபார வருமதிகளை நடைமுறைப் பரிப்புகளின் கீழ் காட்டியிருந்ததுடன் வியாபார சென்மதிகளை நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டியிருந்தனர்.

(8) சிலர் நிதி நிலைக் கூற்றில் திரள் தேய்மானத்தைப் பதிவு செய்வதற்குப் பதிலாக வருடாந்தத் தேய்மானத் தொகையைப் பதிவு செய்திருந்தனர்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனம் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், நாட்குறிப்பேடுகளைப் படிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காண்பதுடன் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாக வெளிப்படுத்தவும்.

**(7)** அதிகளவான கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(8)** உங்களது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் முனைப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -